ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2096/70 - 2018 නොවැම්බර් මස 09 වැනි සිකුරාදා - 2018.11.09

*2096/70 ஆம் இலக்கம் - 2018 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 09 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி I : தொகுதி (I)- பொது

### சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும்

*எனது இல.: பிஎஸ்/சீஎஸ்ஏ/00/2/3.*

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி அவர்களால் செய்யப்படும் பிரகடனம்

(முத்திரை)

**மைத்திரிபால சிறிசேன**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 33 ஆவது உறுப்புரை (2)(இ) உப உறுப்புரையின் மற்றும் அரசியலமைப்பின் 62 ஆவது உறுப்புரையின் (2) உப உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கவேண்டியுள்ள அரசியலமைப்பின் 70 ஆவது உறுப்புரையின் (5) ஆவது உப உறுப்புரையின்கீழ் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் வண்ணம் மற்றும் 1981 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க பாராளுமன்றத் தேர்தல் சட்டத்தின் 10 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஆகிய நான், இப்பிரகடனத்தின்மூலம் –

(அ) இன்று நள்ளிரவு முதல் நடைமுறைக்குவருமாறு பாராளுமன்றத்தைக் கலைப்பதுடன், புதிய பாராளுமன்றம் இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு சனவரி மாதம் பதினேழாம் திகதி கூடுமாறு அழைக்கின்றேன் எனவும்;

(ஆ) பாராளுமன்ற உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் திகதியாக இரண்டாயிரத்துப் பத்தொன்பதாம் ஆண்டு சனவரி மாதம் ஐந்தாம் திகதியை நிர்ணயிக்கின்றேன் எனவும்;

(இ) தெரிவத்தாட்சி உத்தியோகத்தர்களால் வேட்புமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டிய காலஎல்லையாக இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு நவெம்பர் மாதம் பத்தொன்பதாம் திகதியில் ஆரம்பித்து இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு நவெம்பர் மாதம் இருபத்தாறாம் திகதி மதியம் பன்னிரண்டு மணிக்கு முடிவடையும் காலஎல்லையை நிர்ணயிக்கின்றேன் எனவும் ; மேலும்

1A - G28903 - 372 (2018/11)

*இவ் அதி விசேட வர்த்தமானியை www.documents.gov.lk என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

(ஈ) இங்கு அட்டவணை I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள தேர்தல் தொகுதிக்குத் தெரிவு செய்யப்படுவதற்கு எதிர்பார்க்கும் வேட்பாளர்களின் வேட்புமனுத் தாக்கல் செய்யப்படவேண்டிய ஒவ்வொரு நிலையமாக அவ்வட்டவணையில் II ஆம் நிரலில் நேரெதிரே குறிப்பிடப்பட்டுள்ள நிலையங்களை நிர்ணயிக்கின்றேன் எனவும் ;

இத்தால் சகலரும் அறிவீர்களாக.

இரண்டாயிரத்துப் பதினெட்டாம் ஆண்டு நவெம்பர் மாதம் ஒன்பதாம் நாளாகிய இன்று கொழும்பில் வழங்கப்பட்டது.

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

**உதய ஆர். செனெவிரத்ன,**
சனாதிபதியின் செயலாளர்.

**அட்டவணை**

| நிரல் I<br>தேர்தல் தொகுதி | | | | நிரல் II<br>வேட்புமனுத் தாக்கல் செய்யவேண்டிய நிலையம் |
|---|---|---|---|---|
| இல. 1 | - | கொழும்பு | - | மாவட்டச் செயலகம் - கொழும்பு |
| இல. 2 | - | கம்பகா | - | மாவட்டச் செயலகம் - கம்பகா |
| இல. 3 | - | களுத்துறை | - | மாவட்டச் செயலகம் - களுத்துறை |
| இல. 4 | - | கண்டி | - | மாவட்டச் செயலகம் - கண்டி |
| இல. 5 | - | மாத்தளை | - | மாவட்டச் செயலகம் - மாத்தளை |
| இல. 6 | - | நுவரேலியா | - | மாவட்டச் செயலகம் - நுவரேலியா |
| இல. 7 | - | காலி | - | மாவட்டச் செயலகம் - காலி |
| இல. 8 | - | மாத்தறை | - | மாவட்டச் செயலகம் - மாத்தறை |
| இல. 9 | - | அம்பாந்தோட்டை | - | மாவட்டச் செயலகம் - அம்பாந்தோட்டை |
| இல. 10 | - | யாழ்ப்பாணம் | - | அரசாங்க அதிபர் அலுவலகம் - யாழ்ப்பாணம் |
| இல. 11 | - | வன்னி | - | அரசாங்க அதிபர் அலுவலகம் - வவுனியா |
| இல. 12 | - | மட்டக்களப்பு | - | அரசாங்க அதிபர் அலுவலகம் - மட்டக்களப்பு |
| இல. 13 | - | திகாமடுல்ல | - | அரசாங்க அதிபர் அலுவலகம் - அம்பாறை |
| இல. 14 | - | திருகோணமலை | - | அரசாங்க அதிபர் அலுவலகம் - திருகோணமலை |
| இல. 15 | - | குருணாகல் | - | மாவட்டச் செயலகம் - குருணாகல் |
| இல. 16 | - | புத்தளம் | - | மாவட்டச் செயலகம் - புத்தளம் |
| இல. 17 | - | அனுராதபுரம் | - | மாவட்டச் செயலகம் - அனுராதபுரம் |
| இல. 18 | - | பொலநறுவை | - | மாவட்டச் செயலகம் - பொலநறுவை |
| இல. 19 | - | பதுளை | - | மாவட்டச் செயலகம் - பதுளை |
| இல. 20 | - | மொனறாகலை | - | மாவட்டச் செயலகம் - மொனறாகலை |
| இல. 21 | - | இரத்தினபுரி | - | மாவட்டச் செயலகம் - இரத்தினபுரி |
| இல. 22 | - | கேகாலை | - | மாவட்டச் செயலகம் - கேகாலை |

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.